உ

சிவமயம்

மானம் பராயானைத் தொழ தானாய் வினைகள் அறும்



# வயாவிளான் - அமரர் திருமதி
# ஐயாத்துரை சின்னம்மாவின்
## நினைவேந்தும்
# வயவையள்

2017

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

"மானம் பராயானைத் தொழ
தானாய் வினைகள் அறும்"



வயாவிளானை பிறப்பிடமாகவும்,
சிறிதுகாலம் கொழும்பை
வசிப்பிடமாகவும் கொண்ட

**அமரர்**

# திருமதி ஐயாத்துரை சின்னம்மா

*அவர்களின் நினைவேந்தும்*

# வயவையன்

**2017**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அம்மா எம்தெய்வம்

முன்னம் முன்னம் நாங்கள் மண்ணில்
காணுந்தெய்வம் அம்மா
தன்னைத் தியாகஞ் செய்து எம்மைப்
பேணுந் தெய்வம் அம்மா

உதிரந் தன்னைப் பால தாக்கி
ஊட்டி வளர்ப்பாள் அம்மா
சதிரம் நொந்தால் தாங்க மாட்டாள்
தவித்திடுவாள் அம்மா

பஞ்சம் வந்த போதுங் கொஞ்ச
கஞ்சி எமக்குத் தந்து
பச்சைத் தண்ணி தான் பருகி
பாதுகாப்பாள் அம்மா

உந்தன் பிள்ளை உதவாக் கரை
என்று எவருஞ் சொன்னால்
எந்தன் மகனா (ளா) இருக்காதே அது
என்று சொல்வாள் அம்மா

✧ஊனம் வந்து உலகந்தள்ளி
ஒதுக்கி வைத்த போதும்
வேணும் எந்தன் பிள்ளை என்று
விரும்பி வளர்ப்பாள் அம்மா

✧முடிநரைத்துத் தடி பிடித்து
தளர்ந்து விழும் போது அவள்
அடிதொழுது அரவணைத்து
அன்பாய்ப் பேணுவோம் நாம

✧இந்த இரண்டும் நிதர்சனமானது அன்னையின் வரலாற்றில், இவற்றிற்கு மேலாக எமது 10 குறள்களையும் பதிப்போம் எம் நெஞ்சில்....

**கவிமணி அன்னைதாஸன்**

**(13.02.1999) சஞ்சீவி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்



வயவைக்கு தாயாக
10.12.1932

அமரர்

வானவரின் சேயாக
11.09.2017

# திருமதி.ஐயாத்துரை சின்னம்மா

அவர்களின்

## திதி நிர்ணயப்பா

ஆண்டு ஏவிளம்பி அருமை மிகு ஆவணியின்
பூண்ட அபரபக்க சப்தமியில் - நீண்ட புகழ்
வயவையூரின் மகள் வள்ளல் எம் சின்னம்மா
கயமுகனின் கழலடைந்தார் காண்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அம்மா அம்மா என் தாயே

அம்மா அம்மா என் தாயே ஆறுதல் தந்தெம்மைக் காப்பாயே
இம்மாநிலத்தில் நீதானே எங்கள் துர்க்கை தாய்தானே
அம்மா அம்மா

இங்கே நாம்படும் வேதனைகள் எல்லாம் உனக்குத் தெரியாதோ
எல்லாம் நீயே அறிந்திருந்தும் ஏனோ எம்மை வாட்டுகின்றாய்
அம்மா அம்மா

எல்லாப் பிழையும் பொறுத்திடம்மா தாயே எம்மைக் காத்திடம்மா
பொல்லாப் பெல்லாம் போக்கிடவே புதுமை ஒன்றைச் செய்திடம்மா
அம்மா அம்மா

அல்லும் பகலும் அழுகுரல்கள் எல்லாத் திசையும் வேதனைகள்
பொல்லா வினைகள் சூழ்ந்தெம்மை புழுவாய்த் துடிக்க வைக்குதம்மா
அம்மா அம்மா

சொல்லால் வடிக்க முடியாத துயரம் எமக்கு ஏனம்மா
எம்மால் தாங்க முடியாது தாயே எம்மைக் காப்பாற்று
அம்மா அம்மா

ஒன்றா இரண்டா நாம் சொல்ல உள்ளத்து வேதனை தீராயோ
என்றும் உன்னை நாம் துதித்தும் ஏனோ எம்மை வாட்டுகின்றாய்
அம்மா அம்மா

நின்றால் நடந்தால் உன் நினைவு எங்கும் எதிலும் உன் காட்சி
துன்பம் வராமல் காத்தெமக்கு துணையாய் என்றும் வந்திடம்மா
அம்மா அம்மா

**கவிமணி அன்னைதாஸன்**

போர்க்கால நேரத்தில் பாரெங்கும் துர்க்கையளை
வேண்டி தோத்தரித்த பாடல்.
பலவெளிநாட்டு பஜனைப் பதிவுகளிலும்
இடம்பெற்ற பாடல் இறுவட்டுக்களும் உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் திருமதி.ஐயாத்துரை சின்னம்மாவின் வாழ்க்கைப் பயணம்.....

இரத்தின துவீபம் என வழங்கும் இந்து சமுத்திரத்தின் முத்தான எம் ஈழமணித்திருநாட்டின் சிகரமென விளங்குவது யாழ்ப்பாணம். யாழ்பாடியின் தனிச்சொத்தான யாழ்ப்பாணத்திற்கு அழகு சேர்ப்பன இதனை வளமாக்கும் கிராமங்கள். இக் கிராமங்களில் ஒன்று தான் வயாவிளான். செக்கச்செவேலென்ற சிறந்த கொழுத்த வளமுள்ள செம்பாட்டுப் பூமி இது. ஆழக் கிணறு வெட்டி அதற்கேற்ற துலாப் போட்டு பட்டையில் நீரெடுத்து பயிரிட்டு வளர்த்தார்கள். துலா என்ற ஒன்று இப்போ உள்ள சந்ததி இது என்ன என்று கேட்கும் நிலை. அன்று எல்லா இடமும் கிணறுகள் இருந்தன. எங்கள் ஊரிலும் கிணறுகள் இருக்கின்றன. கல்லுப் பாறைக் குடைந்து 35' - 40' கள் நிலத்தில் 10' - 12' விட்டமுள்ள கிணறுகளை அந்த நாட்களிலேயே எம்மவர் அமைத்திருந்தனர். துலா - அது 35' - 40' வளர்ந்த முற்றிய முழுப்பனையில் வட்டு வரை வைரம் பேச வேண்டும். அன்றேல் வளைந்து முறிந்து விடும். இத்துலா ஆடுகாலில் 'பேண்' கட்டி அச்சுலக்கை மீது நிற்கும் இவ் ஆடுகாலில் நீளத்தடிகள் கட்டி துலாமிதித்தே கிணற்றிலிருந்து அன்று நீரெடுத்தனர். நீரைப் பட்டைகளிலேயே எடுத்தனர். பட்டையின் வடிவே தனி அழகு. பனை ஓலையாலும் விளிம்புகள் பனம் மட்டையாலும் செய்யப்பட்டிருக்கும். பனம்பொருள் உற்பத்திகளின் பொருட்காட்சிகளில் தான் இப்போ உள்ளவர்கள் பார்க்க முடியும். ஏன் அன்றும் பலருக்கு துலா மிதிக்கத் தெரியாது என்பதும் அது ஒரு தனிக்கலை என்பதும் குறிப்பிடத்தக்கது.

எம் மண்ணின் சிறப்பு என்னவெனில் எப்பயிரிட்டாலும் அப்பயிர் செழித்து வளர்ந்து வளங்கொழித்து விவசாயியை மனங் குளிர வைக்கும் தன்மை கொண்டது. அதுமட்டுமல்ல எம்மூரின் பெயர்ச் சிறப்பும் அலாதியானது. அந்நாட்களில் போரிடும் மன்னர்களின் சேனைகள் எம் மூர்மக்களாம். அதாவது மன்னர்க்கு போர்வீரர்களை வழங்கிய ஊர், வீரர்கள் நிறைந்த ஊர், வீரம் விளையும் ஊர். அதனால் வயவர் - வீரர் வாழுகின்ற ஊராகிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்மூர் வயாவிளான் என்றாயிற்று. இதன்பொருள் தெரியாது இன்றும் எம்மூரவர் சிலரும் வேற்றூராரும் எமது ஊரை வசாவிளான் எனப்பாவித்தலின் பேதமையை என்னவென்பது. சிங்கள அரசினர் தபாலகத்தை அமைக்கும் பொழுது எம்மூரின் மகத்துவம் தெரியாத யாரோ அவர்களிற்கு வசாவிளான் என எடுத்துரைத்த காலந்தொட்டு இப்பெயர் வசாவிளான் என்று வழங்கி வருகின்ற வேதனையையும் உங்களுடன் பகிரலாம்.

இவ்வயவையின் மூத்த குடிகளில் ஒன்றான அன்று ஆறுமுகம் (கொழும்பப்பா) - சின்னத்தங்கம் இல்லறத்தில் இணைந்ததின் பயனாக சிவகுரு, கணபதிப்பிள்ளை, சின்னம்மா என்ற மூவரைத் தம்வாரிசாக்கினர். இவர்களில் மூத்தமகன் சிவகுரு அந்த நாட்களிலேயே தம் கல்வியை இன்றும் பிரபலமாகவுள்ள கொழும்பு ஆனந்தாக் கல்லூரியிலேயே தொடங்கினார். காரணம் இவரது தந்தை ஆறுமுகம் கொழும்பிலேயே ஆனந்தா கல்லூரியில் வாடனாக(Warden) கடமையாற்றியதில் சில காலம் அங்கு வாழ்ந்தனர். பின் இவர்கள் பிறந்தகம் வர இவர்களது கல்வி வயாவிளான் மத்திய கல்லூரியிலேயே தொடர்ந்தது. இதில் மூத்த மகன் சிவகுருவை வல்வெட்டித்துறை வீரவாகு கொம்பனியில் கணக்காளராக்கி இவருக்குரிய துணைவியாக சபாபதிப்பிள்ளை தம்பதியினரின் மூன்றாவது புத்திரி அன்னப்பிள்ளைக்கு கரம் பற்றிக் கொடுத்தனர். இரண்டாவது மகன் கணபதிப்பிள்ளை ஆரம்பத்தில் அந்நாட்களின் கிராமத் தலைமைக்காரரான விதானையார் வேலை பார்த்தார். பின் அவர் இலங்கை எழுதுவினைஞர் சேவையில் சேர இவருக்கு பஸ்கொம்பனி முதலாளியான சாமி தம்பையா அவர்களின் சிரேஷ்ட புத்திரி மங்கையர்க்கரசியை கரம் பற்றிக் கொடுத்தனர். தம் ஏக பெண் வாரிசான சின்னம்மாவிற்கு தமது சொந்த மருமகரான கச்சாய் கொடிகாமத்தைச் சேர்ந்த வீரசிங்கம் ஐயாத்துரையை மணாளராக்கினார். இவர் தபால் அதிபராகப் பணிதொடங்கி பின் பஸ் கொம்பனியில் அலுவலராகிப் பின் அரச நெற் களஞ்சிய காப்பாளராக ஓய்வுபெற்றார்.

இந்நினைவேந்தல் மலரின் நாயகியான அமரர். சின்னம்மா அந்த நாட்களிலேயே S.S.C வரை ஆங்கில மொழிமூலக் கல்வியை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வயாவிளான் மத்திய கல்லூரியிலே பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது. இவ்வுலகவாழ்வில் எண்பது வருடங்களைக் கண்ட ஒருவரது வாழ்க்கை வரலாறு எழுதுவது என்பது இலேசான ஒன்றல்ல. என்றாலும் இவரின் வாழ்வு எம்மூர் மண்ணின் மக்களின் வாழ்வியலின் ஒரு மாதிரியாக (Pattern) அமைந்த பெருமையை அவர்களில் ஒருவராக ஏறக்குறைய எனது வாழ்க்கையின் இருபத்தைந்து வருடங்கள் வரை ஒன்றாக இருந்து வாழ்ந்து ஏன் எனது செவிலித்தாய்களில் ஒருவர் என்று குறிப்பிடும் அளவிற்கு எனக்கு உணவூட்டி வளர்த்த அன்னையின் ஆவணத்தை ஆக்கும் வாய்ப்பும் பெற்றமையும் நான் பெற்றபேறுகளில் ஒன்றெனப் போற்றி மிகச் சுருக்கமாக, வருங்காலச் சந்ததிக்கு கிராமிய வாழ்வு எப்படி இருந்தது எனக் காட்டும் வகையில் தொடர்கிறேன்.

ஆறுமுகம் சின்னத்தங்கத்தின் அருமைவாரிசுகளைப் பட்டியலிடின் மூத்தமகன் சிவகுரு - அன்னப்பிள்ளை தம்பதிகட்கு அருமையாக இருபுதல்வர்கள். மூத்தவர் மோகனதாஸன் (மோகன்). இளையவர் முருகதாஸ் (நாதன்). இரண்டாவது புத்திரன் கணபதிப்பிள்ளை - மங்கையர்க்கரசி தம்பதிகளிற்கு சுபஸ்ரீ, ராஜஸ்ரீ, ஜெயஸ்ரீ, சுபாஜினி, செல்வஸ்ரீ எனும் நால்வர்.

அதுமட்டுமெல்ல இவர் தமது சகோதரரான கதிர்காம நாதனின் ஸ்ரீதரன், ஸ்ரீரஞ்சனி, ஸ்ரீகோதை, தாமரைச்செல்வி, கலைச்செல்வி எனும் ஐந்து பிள்ளைகளில் ஒருவரான தாமரைச்செல்வியைத் தனது மருமகளாகத் தேர்ந்ததையும் சுட்டிக் காட்டத்தகும்.

கந்தர்- வீரசிங்கத்தின் புதல்வரான மூத்தமகன் பாலசிங்கம் அதாவது ஐயாத்துரையின் மூத்த சகோதரம் அவர்களுடனும் தனது சகோதரியான பொன்னம்மாவுடனும் அவர்களது பிள்ளை களுடனும் மிக அன்போடு உறவாடி வந்தமையையும் குறிப்பிடலாம்.

சிவகுமார் ஆரம்பத்தில் தான் படித்த பாடசாலையான வயாவிளான் மத்திய மகா வித்தியாலயத்திலேயே கணித ஆசிரியராக பணியாற்றும் வேளையில் மொரட்டுவ பல்கலைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கழகத்திற்கு தெரிவாகியிருந்தார். அதனைப் பூர்த்தி செய்த இவர் தான் பெற்ற பட்டமான இலத்திரனியல் தொடர்பாடல் பொறியியலாளர் தகமைக்கேற்ப மில்லர்ஸ் லிமிற்றெட்டில் இணைந்து இப்போ Electrical Service Manager for Carestream எனும் உயர் பதவியில் தொடர்ந்த வண்ணம் உள்ளார். இவருக்கு லக்ஷன் எனும் ஆணும் அபிராமி எனும் பெண்ணுமாக பம்பலப்பிட்டி காசில்லேனிலுள்ள தொடர்மாடியில் வாழ்க்கைப் பயணத்தை தொடர்ந்த வண்ணமுள்ளனர். லக்ஷனும் அப்பா வழி தொழில் வல்லுநராகவும், அபிராமி உயர்தர மாணவியாகவும் உள்ளனர்.

அசல் கிராமப் புற வாழ்க்கையின் சின்னமாகத் திகழ்ந்து நகரப்புற வாழ்க்கைக்குள் திளைத்து அங்கும் நிறம் மாறாத பூவாக வாழ்ந்து அமரத்துவம் அடைந்த பக்குவம் இங்கு சுட்டிக் காட்டத்தக்கது.

ஆம் இவரின் வாழ்க்கை அந்நாட்களில் கூட்டுக் குடும்பமாக ஆரம்பித்தது. அவரது இல்லம் அமைந்த பாங்கு இரு அறைகள், முன் விறாந்தை பக்கத்திலும் ஓர் விறாந்தை கல் வீடு ஈசானத்தில் குசினி அதுவும் ஆரம்பத்தில் மண் ஓலைக்குடிசை, நடுவில் முற்றம், முன்னால் மூத்த அண்ணர் சிவகுரு - அன்னப்பிள்ளை அவரின் சகோதரி தங்கமுத்து தந்தை சபாபதி குடும்பம். அதுவும் பாரிய இரு அறைகள் கொண்ட விறாந்தையுடனான மண் ஓலை வீடு. நாற்சாரும் வீடு என்ற அமைப்பில் மேற்குப்புறத்திலும் ஓர் மனை. இத்தோற்றம் கூப்பன் கடையின் ஆரம்பகாலத் தோற்றம் இதுவே சண்முகவாசாவும் கூட.

இக் கூப்பன் கடைக்கு சொந்தக்காரர் செல்லையா அப்பு. செல்லையாஅப்புவும் துணைவியாரும் அப்போ எல்லோர்க்கும் கூப்பனப்பா கூப்பனாச்சி. இருவருக்கும் பிள்ளைகள் பேரளவுக்கு இல்லையே யொழிய சின்னம்மாதான் சொந்தப்பிள்ளை.

அந்த நாட்களில் எம்மூரில் கல்வீடுகள் மிகக் குறைவு ஆக இக் கூப்பன் கடை அப்போ உள்ள ஓரிரு கல்வீடுகளில் ஒன்று என்ற பெருமையும் பெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூப்பன் கடை 1950 களில் ஊருக்கு 2-3 உத்தரவு பெற்ற வியாபாரிகளை அமைத்து கிராமிய மக்களிற்கும் உணவுப் பஞ்சம் ஏற்படாது பொருட்களைப் பங்கீடு செய்து பட்டினி போக்க எடுத்த அரசின் முயற்சியே ஆகும். குடும்பத்தின் வறுமை நிலைக்கேற்ப கூப்பன் கிராம தலைமைக்காரர் (விதானையார்) மூலமாக வழங்க இக்கூப்பனுக்குரிய பொருட்களாக அரிசி, பருப்பு, மா, சீனி போன்ற அத்தியாவசியப் பொருட்களை விநியோகிக்கின்ற பணி இக் கூப்பன் கடைகள் செய்தன. செல்லையா அப்புவும் இப்படியான உத்தரவு பெற்ற வியாபாரிகளில் ஒருவர்.

ஆக இப்போ இவரின் வாழ்வு கூப்பன் கடையுடன் எதிரே அண்ணர் சண்முகம் (சிவகுரு) குடும்பம். அதற்கு அருகில் நல்லையா அருமைப்பிள்ளை சின்னராசா (மாத்தாண்டர்) மணி குடும்பம் என வாழ்க்கை நகர்கிறது.

கால ஓட்டத்தில் இவருக்கு மூத்த இருபிள்ளைகள் தவறிவிட பவானி, சாந்தகுமார் என இருபிள்ளைகள். இருவரும் சற்று நோய் வாய்ப்பட்டவர்களாக வளர்கிறார்கள். இவ்வேளையில் இவர்களைப் பராமரித்து உதவும் ஓர் தாதியாக ஆலோசனை யாளராக எனது தாயாரும் நெல்லி ஆச்சியாக இணைந்து கொள்கிறார். இப்பிள்ளைகளை நடமாடச் செய்வதற்கு அந் நாட்களில் எடுத்த மருத்துவ முயற்சிகள் அனந்தம். இதேவேளை மூன்றாவது மகன் சிவகுமார் உதயமாகின்றான். எல்லோருக்கும் ஏக்கம் இவனும் மூத்தவர்களைப் போலாகி விடுவானோ என்று கடவுளின் கருணையும் அவனைக் கையாண்டு வளர்த்தவர்களின் திறனும் ஓர் சிங்கக் குட்டியாக வளர்கிறான்.

அதேவேளை தமையனார் சிவகுருவின் உடல் நிலையும் மோசமாகின்ற பொழுதிலும் இவருக்கும் இருவாரிசுகள் எல்லோரும் பயந்தது போலன்று இருவரும் வயவர்களாகவே வளர்கின்றனர்.

சின்னம்மாவிற்கு இரு ஆண் சகோதரர் மட்டுந்தானே என்பது இதனை வாசிப்போர் இதுவரை உணர்ந்திருப்பீர்கள். அங்கே தான் இவரின் அன்பே சிவம் என்ற வாக்கின் அடிப்படையில் வாழ்வு நகர்வதை அவதானிப்பீர்கள். இங்கு இவரது உடன் பிறவாச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகோதரர்களாக செல்லத்துரை (கயிலாயர்), சின்னத்தம்பி, சுப்பிரமணியம் (அதிபர்), இராசையா, கதிர்காமநாதன் (கிளியர்), கனகரத்தினம் (லிகிதர்), கிருஷ்ணமூர்த்தி, சுப்பிரமணியம் (மாத்தாண்டர்) என்போரையும் அரவணைத்து உபசரித்து கொண்டாடி மகிழ்ந்ததைக் குறிப்பிட்டேயாக வேண்டும்.

கூப்பனப்பா மாடும் வளர்த்தார். கூட்டுக்குடும்ப காட்சி விரிகிறது பாருங்கள். இவர்களது பின்வளவு பனந்தோப்பு. அதில் சோமு ஓலை வெட்டி வீழ்த்தி பின்னுக்கு அடுக்க அவை மாடுகளுக்குத் தீனாகும் பாங்கு அபரிமிதமானது. அதேவேளை சோமு கிளாக்கரையா (ஐயாத்துரை)வுக்குரியதையும் போத்தல்களில் வைத்த பின் ஏகுவார். ஆறு ஆறரைக்கு ஓலையைச் சிறாய்த்துவிட எல்லோரும் நானுட்பட வட்டமாக முற்றத்தில் இருந்து ஓலைகளைச் சட்டமாக்கி ஒரு பகுதியை கிழித்து வெட்டி மாட்டிற்கு அன்றைய தினத்திற்கு தொட்டில்களில் போட்டு உணவாக்க மீதியைப் பிடிகட்டி வைக்க இடையில் தேனீர் எல்லோருக்கும் சின்னம்மாக்கா சின்னம்மா மாமி பரிமாறிய அக்கிராமச் சூழலை எப்படி எழுதுவது. மாட்டுத்தொட்டிலின் வனப்பு அப்பப்பா. ஏழைகளே குடிசையில் வாழ்ந்த காலம். கோமாதாவிற்கு கூம்புக் குடில் அதனை அமைக்கும் கை வண்ணமே தனி. இந்த அளவுக்கு கிராம மக்கள் கோமாதாவைப் போற்றி வளர்த்தார்கள்.

கூப்பனப்பா காலமாகிவிட கூப்பனாச்சி (மாமி)யை இவர் பராமரித்த பாங்கை உடனிருந்தோரில் வியக்காதோரில்லை. இப்போ கூப்பன் கடை உரிமம் கைமாறுகிறது.

உத்தரவு பெற்ற வியாபாரி ஐயாத்துரை சின்னம்மா ஆகின்றார். இவரது பெயருக்கு மாறிய பின் கூப்பன் கடையில் ஒரு பாரிய மாற்றத்தைக் காணமுடிந்தது. கூப்பனப்பு இலேசில் கடன்கொடுக்க மாட்டார். ஆனால் அவரின் மறைவின்பின் பெட்டி கடகங்களுடன் கூப்பன் கடைக்கு வந்த பலர் மணித்தியாலக் கணக்கில் தங்கி நின்றனர். இம் மக்களில் பெரும்பாலானோர் காசு கொடுத்து வாங்கும் நிலையிலில்லை. வறுமைச் சூழல். குடும்பத்தில் 6 -7 பிள்ளைகள். ஏன் சில குடும்பங்களில் 8-10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைகளுமிருந்தனர். போதிய வருமானமற்ற ஏழைக்கூலித் தொழிலாளர்களாக வீட்டுத் தலைவர்கள் பேரே குறிப்பிடக் கூடியளவுக்கு பல குடும்பங்களிற்கு இவர் கடன்கொடுத்து கரையேற்றியதை பட்டினியிலிருந்து காப்பாற்றியதை குறிப்பிட்டே ஆக வேண்டும். இதனை இவரிடமிருந்து பெற்று இன்று நல்ல நிலையிலிருக்கும் பலர் மறக்க மாட்டார்கள் என நினைக்கிறேன். மருகர் ஸ்ரீயின் கவிவரிகள் சான்றாகும்.

கூப்பனப்பு காலமாகி விட்டார். கடையைப் பொறுப்பெடுத்தும் விட்டார். கடைக்குரிய பொருட்கள் கொள்வனவு சுன்னாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் கூப்பன் முத்திரைகள் வெட்டி ஒட்டி கணக்குப்பார்த்தல். சாந்தி பிற்பகல் 2-3 மணியளவில் பஸ்ஸில் நான் முத்திரைகளைக் கொண்டு செல்வேன். அங்கு அயல் கடைக்காரர்களும் நிற்பர். பொருட்கள் ஏற்றி எங்கடை கடைக்கு வந்து இறக்கி சரிபார்க்க 7 - 8 மணியாகிவிடும். சில சந்தர்ப்பங்களில் லொறிக்கார நவரத்தினம் அண்ணையின் ஆக்கினையால் அவசரத்தால் மாறிச் சரக்குகள் பறித்த சந்தர்ப்பங்களுமுண்டு. இப்படியாக தன்னாலியலாத நிலையிலும் ஏழைகளின் பசி தீர்க்க ஏனையோரின் உதவியைப் பெற்று உழைத்த உத்தமி இவர் ஆவார். நான் ஆசிரியராக வாழைச்சேனைக்கு சென்ற காலங்களில் மருகர் மோகனதாஸ் அவர்களும் உதவியதையும் பதிவிடலாம்.

அதுமட்டுமல்ல சில குடும்பத்தினர் இவரின் கைக்கு கடை மாறியபின் சாமானுக்கு வந்தால் ஏறக்குறைய 3 - 4 மணித்தியாலங்கள் செலவழித்தே செல்கின்ற நிலையும் பார்த்தேன். சின்னம்மாக்கா சின்னம்மாக்கா நிச்சயம் அடுத்த முறை தருவேன், எணை நெல்லியாச்சி நீயும் ஒருக்கால் சொல்லணை என்று சம்பாஷிப்பர். ஆனால் ஒருவிடயத்தை இங்கு குறிப்பிட்டே ஆக வேண்டும். எவரும் வெறுங்கடகம் பெட்டிகளுடன் வீட்டிற்கு ஏகியதை என் அனுபவத்தில் கண்டதில்லை.

பல குடும்பங்களைப் பெயரிடலாம் ஆனால் அவர்கள் இன்றைய நிலையில் இதனை ஏற்பார்களோ விரும்புவார்களோ என்றும் தெரியாது. இவற்றில் எதுவும் மிகைப்படுத்தவில்லை என்பதையும் குறிப்பிடடே ஆக வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிளாக்கரையா (ஐயாத்துரை) ஒருவஞ்சகமில்லாப் பேர் வழி. ஆனால் பிடிச்சதை எவராலும் மாற்ற முடியாது. அன்று காலை 10.00 மணி இருக்கும் நாங்கள் எல்லோரும் அல்லாரைக்குப் போகின்றோம். கிளாக்கர் பொன்னுத்துரை அண்ணரின் நீளக்கார் (Consul) காருக்குள் நான், பவானி, சாந்தி, சிவகுமார் இல்லை என நினைக்கின்றேன். மோகன், நாதன (சிறுவர்) அம்மாவிடம் சொல்கிறார். இன்றைக்கு கொடிகாமத்திற்குப் போகத்தான் வேணும். இதைக்கேட்டவர் மச்சாள் உந்தக் கதையை மட்டும் கதைக் காதையுங்கோ. அல்லாரையில் நிற்கிறோம். மனேஜர் கைலாயர் வீடு இவரது அப்பாவும் பெரியபுள்ளி.

வரவேற்பு உபசாரம் தடபுடல். சாப்பிட அமர்கிறோம். நீள விறாந்தை, தென்னையோலைதான் அப்போதைய லஞ்சீற் (கல்லை). ஆம் மிக அருமையாக பச்சைத் தென்னோலையை வாழையிலை நீளத்திற்கு வெட்டி ஒன்றோடொன்று பச்சை ஈர்க்கிலாலை குத்தி இணைத்துப் பரிமாறிய காட்சியை எப்படி மறப்பது? நாம் முதன்முதலில் மானை உயிருடன் இவர்களது வீட்டில் தான் கண்டது. தமது செல்லப்பிராணியாக மானையும் வளர்த்தார்கள். சாப்பாட்டிற்கு பின் இவரது திட்டப்படி சற்று மனக்கசப்புடன் இருந்த தமையனார் பாலசிங்கம் வீட்டிற்கு கொடிகாமம் அழைத்துச் சென்று உறவுகளையும் அரவணைத்து இணைத்த அற்புதத் தாய் இவர். அன்றிலிருந்து அவர்களது கசப்பும் நீங்கி இன்றும் ஒற்றுமையுடன் இருப்பதையும் சுட்டிக் காட்டல் பொருந்தும்.

மூத்த இருபிள்ளைகளும் திடகாத்திரமற்ற நிலை. சிவா படித்த திறமைசாலி (மற்ஸ் என்னிடமும் படித்தவர்) மொறட்டுவ அட்மிஷன் (அனுமதி) கிடைத்து விட்டது. போகவேண்டிய நிலை இனக்கலவரம் நடந்துமுடிந்த தாக்கம் மாறவில்லை. போக வேண்டிய இடம் மொறட்டுவ - கட்டுப்பெத்த. மாற்றுச் சகோதரர்கள் சூழ்ந்த பிரதேசம் என் நம்பின சொத்தை அனுப்பவா? துடிக்கிறது தாயுள்ளம். ஏன் நாங்களும் தான். அதேவேளை வேலை கிடைக்காமலும் இல்லை. பகுதிநேர கணித ஆசிரியர். இந்நிலையில் அனுப்பவா? நெல்லியாச்சிக்கு ஓரளவு சாத்திரமும் தெரியும். சிக்கலான நிலையில் இவரின் அறிவுரை கேட்டு நடக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்குவமும் இவர்களுக்கு உண்டு. சின்னம்மாவும் இவவின் பிள்ளைதான். பிள்ளை என்று தான் அழைப்பா. பிள்ளை அவன் ஊர் போற்ற வளர்வான் ஒரு குறையுமில்லை அனுப்பு. அனுப்பினோம் படித்து முடித்து வரும்வரை தாயுள்ளம் பட்ட வேதனை. அதன் பயன் இன்று தாய், சேய் உறவுக்கு தக்க உதாரணமாக படுத்த படுக்கையாக பத்து வருடங்களாக தன்னைப் பாராட்டி சீராட்டிய அன்னையைத் தாமரைச் செல்வியுடன் தாங்கி ஏகவைத்த தாயைக் காத்த தனையன் இவன்.

அம்மா அப்பாவின் பண்புக்கேற்ற வகையில் சண்முகவாசா அன்று எப்படி இருந்ததோ. இன்றும் காசில்லேனிலுள்ள இவர் மாடி வீடு. எம்மவர்களிற்கு உதவிக் கொண்டிருப்பதை உற்று நோக்கினேன் பதிகின்றேன். எதுவும் இங்கு மிகைப்படுத்தலில்லை.

பணம், பட்டம், பதவி, வீடு, வாசல், கார், இத்தியாதி இத்தியாதி என்று வளர்ந்த பொழுதிலும் பெரியத்தான் சின்னத்தான் பாப்பண்ணை என்று சொல்லியழைத்த வார்த்தை உறவு, பழக்கம். இன்றுவரை மாறவில்லை. சிலரை தூசு தட்டிப் பார்க்கின்ற தன்மை காசில் லேனில் உள்ள வீட்டில் மிளிர்ந்து கொண்டிருப்பதை சுட்டிக்காட்டலாம்.

அமரரின் குணவியல்பு தனித்துவமானது. சகோதரன் கனகரத்தினமும் இவரது வெள்ளைமா இடியப்பம் மீது பிரியங் கொண்டவர். வஞ்சகமில்லாது சப்பிடுவார். இவரும் கொடுப்பார். ஒருசமயம் நானும் சாப்பிட்டுக் கொண்டிருக்கிறேன். இவர் வந்து விட்டார். தம்பி சாப்பிடண்டா. இவர் இடியப்பம் அவித்துக் கொண்டிருக்கிறார். நான் சாப்பிடுவதென்றால் 50 இடியப்பம் வேணும் தருவியா? அக்கா. ஓம், ஏலுமென்றால் சாப்பிட்டுப்பார். நான் பகிடி என்று தான் நினைத்து சாப்பிட்டு எழுந்து விட்டேன். சரி எங்கே நீ சாப்பிடு பார்க்கலாம். இடியப்பம், சம்பல், சொதி சேர்க்கை அலாதி. இவரும் சாப்பிடுகிறார். அவர் அவித்துக் கொட்டிய வண்ணம். கனகண்ணை வென்று விட்டார். நம்ப மாட்டீர்கள். இப்படியான ஒரு காட்சியை யாரும் பார்த்திருக்க மாட்டீர்கள் என நம்பலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதுமட்டுமல்ல அங்கே பாருங்கள். ஏனைய இரு செல்வங்களிற்கும் இவ்வாய்ப்பை எண்ணிப் பார்க்க முடியா நிலை. சிவகுமாருக்கு திருமணப் பேச்சு. சீதனம், வீடு, வளவு, இனாம் எல்லாம் உத்தியோகத்திற்கு ஏற்ப போட்டா போட்டி இட்டு அலைமோதும் கல்யாணத்தரகர் சந்தை. ஏன் என்னிடமே சிலர் வாய்விட்டுக் கேட்ட நிலை. எனது தாயாரும், இவரது தாயாரும் பவானியையும் சாந்தியையும் பராமரிக்கக் கூடிய பாசமிகு, பண்புமிகு வாழ்க்கைத் துணையைத் தேடியதன் விளைவு தாமரைச்செல்வி. ஆம் அவள், அவள் வெண்தாமரை, செந்தாமரை இரு தாமரைகளுக்கும் உரிய இரு செல்விகளும் சேர்ந்த செல்வியாகத் திகழ்வது ஆன்மிகக் கண்கொண்டு பார்ப்பவர் களுக்கு அப்பட்டமாகும். பவானியையும் சாந்தியையும் மட்டுமல்ல மாமியையும் பார்த்து மாண்பு சேர்த்த பாங்கு வியக்கத்தக்கது. காரணம் அவள் சொந்தச் சகோதரனின் பொண்ணுமல்லவா.

போர்! போர்!! இடம்பெயர்ந்து ஓடினோம். நாம் உரும்பிராயில் அவர்கள் நவக்கிரியில். எல்லாளன் வாசிகசாலைக்கு அருகில் சாந்தியின் கூப்பன் கடையாம். ஓடினேன், பார்த்தேன் அங்கும் ஒரு கூட்டம் பெட்டி கடகத்துடன் காத்திருந்த காட்சியைக் கண்டு வியந்தேன். அறவிட முடியாக்கடன் இன்று வரை உண்டு.

பெரும் போர் மூண்டது. நிரந்தர இடப்பெயர்வு கொழும்பில் சாந்தி, பவானி, கடைமாமி, சிவகுமார் இவர்களுடன் கூட தர்சன், லக்சி, அபி கூட்டுக்குடும்பமே தான். இது வேறுமாதிரி. வருவார்கள். சிலர் தங்குவார்கள். போதிய இடவசதியில்லா விட்டாலும் மன வசதியிற் குறைவே இல்லை. கை நாட்டுக்காரர் தொடக்கம் கையெழுத்துப் போடும் கனவான்கள் வரை ஏதோ ஒருவகையில் சண்முகவாசாவின் உதவிகளை அன்று பெற்ற கூட்டம் போல் இன்றும் காசில்லேனில் பெற்ற வண்ணமுள்ளதைப் பார்த்தவன், பார்க்கிறவன் என்ற வகையில் எந்த வகை மிகைப்படுத்தலுமின்றி மீண்டும் அன்னை, மாமி, அக்கா, ஆச்சி, சின்னம்மாவின் வாழ்க்கைத் தடயத்தின் ஒரு சிறு பகுதியை மட்டும் ஆவணமாக்கி நிறைக்கிறேன். அன்னாரின் ஆன்மா சாந்தியடைவதாக. நல்லதையே நினைத்து நல்லதையே பார்த்து நல்லதையே செய்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துணைவர் வழி மருகர் துரைராசாவின் துடிப்பு

அன்பும், அறிவும், அழகும் நிறைந்த மாமி. எங்களிற்கு வாய்த்த மாமி, யான் கனடாவில் நிற்கும் போது விடியல் - நேரம் ஓர் துயரச்செய்தி என்போனில் ஒலித்தது. ஐயாத்துரை மாமி என நாம் எல்லோரும் ஆசையுடன் அழைக்கும் சின்னம்மா மாமி இறைபதம் அடைந்துவிட்டார் என்பது தான் அந்தச் சோகச் செய்தி. உடனே வந்து அவவின் முகத்தைப் பார்க்க வேண்டும் போல இதயம் துடித்தது. சூழ்நிலை தடுத்தது. அன்று முழுவதும் அவவின் ஞாபகங்கள் தொடர்காட்சியாக என் மனதில் ஓடிக் கொண்டே இருந்தன. மாமாவைக் கைப்பிடித்து ஜோடியாக இருந்ததும் வயாவிளானில் குடும்பமாக வாழ்ந்ததும் பழைய கதை. அந்தச் சுற்றாடலில் மாமியைத் தெரியாதவர்கள் இல்லை எனலாம். அவரின் அன்பும், அரவணைப்பும் வீடுதேடி வருவோரை உபசரிக்கும் மாண்பும், ஏழைகட்கு உதவி செய்யும் தன்மையும் அவரை ஓர் உத்தமியாக ஊரே போற்றியது. எனது பள்ளிப்பருவம் என் மனதில் இன்றும் விரிகின்றது. வீடு செல்லும் போதெல்லாம் வா தம்பி வா என்று இடியப்பமும் சொதியும் வெள்ளித்தட்டிலிட்டு கொண்டு வந்து கொடுப்பா. அந்த முகத்தை இன்றும் மறக்க முடியவில்லை. அதுமட்டுமல்ல தன் சொந்தச் சகோதரியின் கைருசியைச் சுவைப்பதற்காய் அந்த நாட்களில் வருடத்தில் ஒரு தடவையேனும் எமது தம்பிராய் வீட்டிற்கு குடும்பத்தோடு பாபு உட்பட மாமாவோடு வந்து நீலக்கால் நண்டும் றோசரிசிசோறும் எப்படித்தான் இவ்வளவு சுவையுடன் சமைக்கிறீர்களோ? என்று மாமியே மெய்ச்சிச் சுவைத்த அக்காலங்களை நினைக்க நெஞ்சு கனக்கிறது. என்றும் மறக்க முடியாது. கடைசிக் காலத்தில் மாமி பிள்ளைகளுடன் கொழும்பில் வாழ வேண்டிய நிலை. அப்போதும் கூட ஊரவர்கள் சகலரினதும் நலன்களை விசாரித்து அறிந்து கொள்வார். அதில் அவர்காட்டிய நாட்டம் சொந்த ஊரில் அவவுக்கிருந்த பற்றை வெளிக்காட்டுவதாக இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவன் எந்த சோதனைகளைத் தந்தாலும் மலர்ந்த முகத்துடனும், திறந்த மனதுடனும் சகலதையும் எதிர்கொண்டு சமாளித்த ஓர் வீரப் பெண்ணாகவே சமூகம் அவரை மதிக்கின்றது.

பண்பிற்கும், பாசத்திற்கும் பிறப்பிடமாய் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு போன்ற சகல நல்லொழுக்கங்களுக்கும் இலக்கணமாய் திகழ்ந்தார்.

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து இன்று தெய்வத்துள் வாழ்கின்ற என்றும் அணையாத தீபமாய் ஒளிரும் எம் மாமியின் ஆத்மா சாந்தி அடைய பிரார்த்திக்கின்றேன்.

**'மதுராந்தகம்'**
**அல்லாரை,**
**மீசாலை**

**மருமகன்**
**சி.துரைராசா**
**Rtd.A.I**

**தாயின் பெருமை குறள்கள்**
**எம் வருங்காலச் சந்ததிக்காக........**

✧காசினைத் தூசாக கருதி உனை வளர்த்திந்த
தேசத்திற்கு தந்தவள் தாய்

✧உதிரத்தைப் பாலாக்கி ஊட்டி உனை வளர்த்து
உலகிற்கு அளித்தவள் தாய்.

✧தள்ளாத வயதினில் தள்ளாதே உன் தாயை
பொல்லாத பழி வந்து சூழும்.

✧மண்ணினில் கருணையின் வடிவாக நடமாடும்
கண்கண்ட தெய்வம் எம்தாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மருகர் கவிஞர் ஸ்ரீயின் மனக்குமுறல்
## வாடியோர் வயிற்றுக்கு வாழ்வளித்த
## வயலை மாமி

01. மாமி எங்களுக்கு மாத்திரமல்ல இவள் மாமி!
எல்லோர் மனதிலும் இவள் மாமி.

02. மண்ணில் மகனையும் மகளையும்
மகிழ்ந்து மணந்ததனால் மாத்திர மல்ல இவள் மாமி
மாழும் பசியோடு மளிகைக் கடை வந்தால்
மடிமுட்ட அரிசி தந்து மனம் மகிழ்வித்தவள் எங்கள் மாமி

03. குறையக் காசு கொண்டோர்
இவள் கூப்பன் கடை கூடி வந்தால்
கூடை முட்டக் கூப்பன் சாமான் கொள்ளக்கொடுத்து
குளிரவைத்த கோத்தென்றலிவள் எங்கள் மாமி

04. மாமி நீ
பாழும் நோயால் பாயில் படுத்திருந்தும்
வாழும் வரை உன் வாயில் கதைத்து
மாழும் வரை உன் மான் விழியால்
மற்றவரைப் பார்த்தே மறைந்திருந்தாய்!!!

05. உன் ஊர் இப்போ உருப்படியாய் இல்லை மாமி
உன் வீட்டு முற்றம் இப்போ முள்ளால் மூடி இருக்கு மாமி
ஓம்பும் கடவுளும் இங்கு இல்லை மாமி
வேம்பும் அங்கு இல்லை மாமி
பாம்புதான் அங்கு படமெடுக்கிறது மாமி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

06. உன் ஊரில் நீ இருந்தால் மாமி
இப்போ உன் இறப்புச் செய்திகேட்டு
ஊரெல்லாம் ஒன்று கூடி ஒப்பாரி வைத்து
ஓவென்று கத்திக் கதறி கண்ணீர் வடித்திருக்கும் மாமி மாமி

07. நீ வயவையில் வளமாய் வாழ்ந்தவள் மாமி
வன்மம் கொண்டோர் உன் வளத்தை அழித்தார் மாமி
நீ வாழும் போதே உன் ஊர் பாழாய்ப் போச்சே மாமி
உன் ஊர் வாசிகசாலை வளமார் பள்ளிகள்
குடிகள் நிறை வீதி கோவில் மரங்கள்
கொடியோர் செயலால் கொழுத்தினர் மாமி
கொலையும் களவும் உன் ஊரில் கூடியே போச்சு மாமி
உன் குருவியும் குயிலும் குண்டுச் சத்தத்தால்
ஓடியே போச்சு மாமி
இனி என்ன இங்கே இருந்து வாழ
என்றா எண்ணி எங்களை விட்டு
அங்கே போனாய் எங்கள் மாமி!

**இவ்வண்ணம்**
**ஊர் மருமக்கள்,**
**கண்ணீர் கருத்தாக்கம்**
**க.ஸ்ரீதரன் (லண்டன்)**

**தாயின் பெருமை.......**

✧குருடு,செவிடு,ஊமையாய்க் குறையோடு பிறந்தாலும் அருமையாய் வளர்ப்பவள் தாய்.

✧ஏழ்மை நிலையடைந்து எவர் தூற்ற நடந்தாலும் மேன்மையே தம் மகவென்பாள் தாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உடன் பிறவாச் சகோதரத்தின் சொத்துக்களில் ஒன்றான உமாவின் உளப்பகிர்வு

உத்தமியின் பிறப்பே
பெருமையின் சிறப்பே
எம் தந்தை வழித்தாயே
வெந்த தெங்கள் மனசே

நெஞ்சமது அறுந்தது
உயிரது உதிர்ந்தது
விழி மூடி விழித்தது
துளிநீரை இறைத்தது

கொஞ்ச நஞ்சமில்லை நீ
மகிழ்ந்து செய்த உதவி
மாமி நீ ஊருக்கே சோறு
போட்ட பூமாதேவி

ஊர் நிலத்தில் வாழ்ந்தது
உயிரில் நிரம்பித் தழும்புது
ஓங்கி உள்ளம் தேம்புது
எப்பிறப்பில் இனிக் காண்பது

என்னத்தை மறப்போம்
எதைத் தான் மறப்போம்
சொல்லச் சொற்களுக்கு வலுவில்லை
சொல்லியழ பக்கத்தில் நாமில்லை.

உமா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மற்றோர் மருகர் செந்தூரின் மனக்குமுறல்

மாமி! மாமி! மாமி!
கனத்த மனதோடு!
வெட்கம் கெட்ட
மானிடராய் நானும்
உங்கள் முன் தலை வணங்குகிறேன்
பாவியாய் உங்கள் முன் எனைவெறுத்து
தலை வணங்குகின்றேன்

மாமி உயிரோடு இருக்கையில்
உங்கள் முகம் பார்க்க வராது,
உங்கள் இறப்பில் யாரோடு யான்பேச
வெட்கத்தோடு மௌனித்து தலைகுனிகிறேன்

உங்கள் ஆன்மா எனை மன்னிக்காது
என்பதையும் நான் அறிவேன் மாமி!
இருப்பினும் உங்கள் பிரிவு எனக்கு
கனத்த நாளாக்கி விட்டது மாமி!
உங்கள் ஆன்மா சாந்தியடைய
இறையருளை வேண்டி நிற்கிறேன்.

செந்தூர்.

**தாயின்.......**

✧ஏழையென்று ஒதுக்கி உன்னை எவரிங்கு தூற்றினாலும்
வேளை அறிந்து உதவுவாள் தாய்.

✧மாய் மாலங் கொட்டும் மனைவி மக்களன்பினிலும்
தாயன்புக்கு ஈடு இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வயவை மாண்பின் ஒரு துளி

ஏழுதலங்கள் சூழ் எழில்மிகு வயாவிளானை
நாலு வார்த்தைகளில் நவின்றிடலாமோ - பாழும்
ஆசை யொன்று தூண்ட அன்னைதாஸன் நானும்
பூசி மெழுகுகின்றேன் புகுந்து.

ஏரோங்கும் எங்கள் எல்லா வளமுங்கொண்ட
நீரோங்கும் நீண்ட வரலாற்று வயவை மண்ணின்
பேரோங்கும் பெருமைகளிற் சிலவற்றை இம்மலரில்
பாரோர்க்குப் பகிர்ந்திடவே பதிவிடுகின்றோமிங்கே.

ஆம் இச் சிறு நினைவேந்தலில் மிகநீண்ட புராதன வரலாறு கொண்ட எம்வயவை மண்ணின் பெருமைகளை எப்படி எடுத்துரைப்பது என்று தெரியாமல் எம் எழுத்திற்கு தெம்பு தருவது இதுவரை எம் மண்ணின் மாண்பு கூறும் எந்த வகையான ஓர் ஆவணப்பதிவும் எம் கண்ணிற்குப்படாமையே யாகும். அதற்குரிய காரணமும் ஓரளவு என்பட்டறிவு பகர்கிறது. இவ்வயாவிளான் மிகப் பெரும் பரந்து விரிந்த நிலப்பரப்பைக் கொண்டு பல குறிச்சிகளை ஆக்கித்தன் வசம் வைத்திருக்கிறது. இக்குறிச்சிகளில் சிக்கியுள்ள மக்கள் ஒவ்வொருவரும் தம் தம் மட்டில் ஒருவருக்கொருவர் இளைத்தவர்களில்லை. நாமே பெரிது என நினைப்பது ஏக தலைமையை, திறமையை ஏற்காமையும் ஒரு காரணமாகிறது எனலாம். ஏன் தற்பொழுதைய நவீன முகநூல் பதிவுகளிலேயே இப்பரிதாபம் புலப்படுவதை பார்த்து வேதனைப்படுகிறவர்களில் நானும் ஒருவன். திறமைகளை மதிக்கத் தெரியாப் பொறாமையும், எங்கே நாம் தாழ்ந்து விடுவோமோ, மற்றவர் விஞ்சி விடுவார்களோ என்ற தாழ்வுச் சிக்கலும் காரணிகளாகின்றனவும் போலுள்ளது. எனவே இதனை ஓர் வழமையான கல்வெட்டாக்காது (கந்தர் ஷட்டி கவசங்கள், சிவபுராணம், திருவெம்பாவை....) ஓர் வித்தியாசமான கற்றோர் மதித்துப் பேணும் ஆவணமாக்க முனைந்தோம். தருகிறோம் இதனையும் தூக்கி வீசும் அளவுக்கு உள்ளோர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்மத்தியில் இருப்பதையும் உணர்வோம். அதுமட்டுமல்ல இப்பாரிய வில்லங்கமான பணிக்கு பலம் தந்தவை எம்மால் வெளியிடப்பட்ட எமது பள்ளியின் உரும்பிராய் சந்திரோதய வித்தியாசாலையின் பவளவிழா மலர் 'உதயநிலா', 'சாயிரசம்' பத்தாவது ஆண்டு நிறைவு மலர் கற்பகக்கனி வெளியீடுகள் 1 - 26 வரை, இவைமட்டுமல்ல மூன்று வருடங்களாக இன்றுவரை தொடரும் எமது சந்நிதியான் ஆச்சிரம ஞானச்சுடர் பயணக் கட்டுரை இவற்றிற்கு வாசகர்கள் தரும் நேர் சிந்தனையான விமர்சனங்களும் இவ்வூக்கத்திற்கு உதவியன எனலாம்.

இடவமைப்பும் சிறப்பும் நினைவேந்தலின் ஆரம்பங் காட்டும் மேலதிகமாக எமது ஊர் பல குறிச்சிகளைக் கொண்டது. அவை சந்திப்பகுதி, பிள்ளையார் கோவிலடி, தோலகட்டி திக்கம்பராய் (புரை) ஆடாலை, கழகாலை, வடமூலை, தென்மூலை, கரம்பக்கடவை, (சாதியத்தின் அடிப்படையிலும் சில கடவைகள்) திடற்புலம், குட்டியப்புலம், சுதந்திரபுரம், மந்திரம் பராய், நொங்க சிட்டி, இணவொல்லை, மடத்தடி, காளிகோவிலடி, பள்ளப்புலம், பலாலியான் வழி,சிங்குறோனை, பெரியண்ணந்தோட்டம் வன்னியர் கோவிலடி..... இன்னும் பல இவற்றில் பல பகுதிகள் அசல்வேளாண் தரைகள்.

உள் இறங்குவோமானால் ஆலயங்களின் மகுடம் மானம்பராய் பிள்ளையார், அந்நாட்களில் மிகப் பிரசித்தி பெற்ற கிடாய் பலியிடுங் கோவிலான மானம்பராய் கண்ணகி அம்மன் அதனைச் சூழ்ந்த ஏழுதலங்கள். அங்கே வடக்கே காளிகோவில், பிற்காலத்தில் வந்த சிவன் கோவில், தெற்கே வன்னியர் கோவில், கரம்பக்கடவை வைரவர் கோவில் (ஞானவைரவர்) மேற்கேயும் இருசிறு கோவில்கள், ஆக இப்போ வயாவிளானைப் பிரதிநிதித்துவப்படுத்தும் திடற்புலம் சுதந்திரபுரங்களில் மிக அபரிமித வளர்ச்சியுடன் உள்ள அம்பிகை சிவன் ஆலயங்கள் கூட மிகப் பிரமாண்டமான தோலகட்டி செப மாலை மாதா. வட மூலை அந்தோனியார் கோயில் என இரு தேவாலயங்கள் (R.C) என்பவற்றைக் குறிப்பிடலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரியார்கள், புலவர்கள், ஆசான்கள் என்ற வகையில் பலர் எம்மண்ணில் வாழ்ந்திருக்கிறார்கள். அவர்களைப்பற்றி ஆய்ந்து எழுத எம்மால் இந்நேரத்தில் முடியாது. ஆனாலும் ஓர் பதிவிற்காக வயாவிளான் என்றால் ஆசுகவி கல்லடி வேலனைக் குறிப்பிடாது இருக்க முடியாது. வயவை பெற்றெடுத்த மூத்தமுத்து. அவன் எங்கள் வயவையின் சொத்து. ஏன் இப்படிப்பட்ட பெரும்பாவலனுக்கு என்வாழ்க்கைக் காலத்தில் ஓர் பாராட்டு விழா எடுத்ததை நான் பார்த்ததுமில்லை, பங்குபற்றியதுமில்லை. ஏன் இன்று வரை அவனுக்கோர் சிலை கூட எடுக்கவில்லை என்பது பரிதாபமே. ஆனாலும் எம்மக்கள் கூட்டத்தில் ஒரு சாரார் இத்தேசியப் புலவனை ஏற்றிப்போற்ற தயாரற்று தயக்கத்துடன் இருப்பதையும் இவ்விடம் பதியலாம்.அத்தோடு எமக்கெல்லாம் தந்தையாக இருந்த வணதோலகட்டிதோமஸ் அடிகளார் பற்றியும் மிக நீண்ட வரலாறு எழுதலாம். நெல்லிரசத்தின் பெருமை சொல்லி மாளாது.

இங்கு தரப்பட்டவை எம்மட்டப் பார்வையே. இதிலும் ஆழமாகப் பல உள. ஆசான்கள் வரிசையில் முதலில் என்குரு இராமலிங்க வாத்தியார் தென்படுகிறார். இவர்களைப் பற்றி எனது YouTube இன்றைய பிரமுகர் நிகழ்வில் Dan T.V ஊடாகப் பகிர்ந்துள்ளேன். அதற்கு மேலாக அதிபர் கதிரேசு வாத்தியார், அதிபர் சிங்கநாயகம் தம்பதியர், சுப்பிரமணிய வாத்தியார் சிவஞான வாத்தியார், அதிபர் சிவக்கொழுந்து பலர், பலர்.

இங்குள்ள எழுதலங்களின் சிறப்பு ஏழு புளிகளும் அன்று இருந்தன. அந்த நாட்களிலேயே மானம் பாராயான் மூலவருக்கான பண்டிகையுடன் முன்னால் பெரிய முகப்பு மண்டபத்துடனேயே இருந்தவன்.

எமது காலத்தில் எம்பெருமானைப் பெருப்பித்துக் கட்ட எம்மிளைஞர் புறப்பட்ட வேளையில் தான் புளிகளை அழிக்க வேண்டி ஏற்பட்டது. அப்புளிகள் கூட ஒவ்வொன்றும் ஒவ்வோர் சுவையுடன் பழங்களைத் தந்த காலங்கள். நாம் சுவைத்த அனுபவங்கள். சுறட்டைச்சிப் புளியின் இன்சுவை தனி, தேனீப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புளியின் தேன்சுவை தனி, எரிச்சலிப் புளியின் அரிப்புச்சுவை தனி, முல்லி ஒல்லைப்புளியின் தோற்றமே மிகப்பெரிது. பெரிய பொந்து இருந்தது. இதனுள் நாம் ஒளித்து விளையாடுவோம். எமது நண்பர்கள் நன்றாக இவற்றில் பாய்ந்து பாய்ந்து ஏறுவர். எம்மில் சிலர் ஏற மாட்டார். நாங்கள் கீழே, நண்பர்கள் வயவிந்தன், பாலு, சின்னாம்பி போன்றோர் மேலே எங்களுக்கு ஓரிரண்டு போடுவார்கள். மீதியை சறத்துள் சண்டிக்கட்டுக்கள் கட்டிக் கொண்டு ஓடுவார்களே. அப்போ எங்கள் மனநிலை! போச்சு, போச்சு எல்லாமே போச்சு. ஆலயத்தைப் புதுப்பிக்க, பெருப்பிக்க வேண்டி இதனை அழித்த வேளை, மூலவரை இடித்தவேளை எம் மூத்த சொத்துக்கள் எம்மைத் திட்டிய திட்டுக்களால் வருந்தினோம். வாடினோம், குத்தியன்கள் எங்கள் கோவிலை இடிச்சுப் போட்டாங்கள். எப்போ கட்டி முடிக்கப்போறாங்கள் என்று ஏச்சு தாங்கினோம். அவ்வேளையில் எம்மிளைஞர் கந்த புராணத்தில் நான் எனது இசைச் சொற்பொழிவில் விளக்கும் அசுரர்களைப் போலவே இருந்ததையும் வாசகர்களுடன் பகிர விளைகிறேன். அதுமட்டுமல்ல எதுவித ஊதியமும் அற்று கடின உழைப்பால் மண்ணைச் சுமந்து அருணா லொறியில் ஏற்றி நாகர் கோவில் மண் பரப்பில் ஒரு பகுதியையே கொண்டு வந்து என் வீட்டருகே குவித்த காட்சி... அதுமட்டுமல்ல அம்மணலில் அசதி தீர நிலவில் எம்மிளைஞர் கூடிய காட்சி... என்னே இனிக்கும் நினைவுகள் அவை. எம்மிளைஞரின் உழைப்பின் சான்றுகள் அவை.

இப்படியாக இடித்தழித்த பழைய கோயிலை புனர் நிர்மாணித்து பரிவார மூர்த்திகளுடனான பாரிய அழகு கொண்ட பண்டிகைகள் அமைத்து மானம்பராயானின் பேரருள் துணைகொண்டு தேரோட வைத்து உழைத்த பலர். பலரது பிள்ளைகள் வெளிநாடுகளில் ஓஹோ என்ற வாழுகின்றீர்கள் மறவாதீர்கள். உங்கள் அப்பா அம்மாவைக் கேட்டுப் பாருங்கள். அவர்களும் மறந்திருப்பார்களோ?அவர்கள் இதற்கு மேலாக இன்னும் பல விடயங்களைச் சொல்வார்கள்.அவை எழுதுவதற்கே ஒரு நூல் தேவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பள்ளிகள்

ஆரம்பத்தில் இது அமெரிக்க மிசன் பாடசாலை. பின் ஸ்ரீ வேலுப்பிள்ளை வித்தியாலயம் கல்லடியான் நாமந் தாங்கிய அற்புதப் பாடசாலை. பல அதிபர்கள் பல மாணாக்கர்கள். சரித்திரம் படைத்த, சரித்திரம் படைக்கின்ற பாடசாலை. அந் நாட்களில் இராமலிங்க வாத்தியாரின் அடி அவரிடம் படித்தவர்கள் யாரும் மறக்க மாட்டார். N.P.T.A பரீட்சை. அப்போ, இப்போ புலமைப்பரிசிற் பரீட்சை. அந்த N.P.T.A பரீட்சையில் சாதனை படைத்தவர்கள் பலர். அதில் நானும் ஒருவன். அங்கு கல்லடி வேலனின் வாரிசுகளான கிளி அக்கா, ராசாத்தி அக்கா அப்போ ஆங்கில ஆசிரியைகள் அவர்கள் தான். எனது ஆங்கில குருமார். ABCD சொல்லித் தந்தவர்கள். எம் நண்பர்கள் பலர் இவர்களிடமும் கற்றவர்கள். இடம்பெயர்ந்தும் சாதனை புரிந்த வண்ணம் உள்ளது எமது பாடசாலை. நூற்றாண்டு காணப்போகும் பாடசாலையை மூடவும் பார்த்தார்கள். கல்லடி வேலனின் பேர்த்தியார் சுசிலா சாரங்க பாணியும் நானும் முருகதாசும், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினரும் எடுத்த அரிய முயற்சியால், கௌரவ டக்ளஸ் தேவானந்தாவின் மிகப் பெரும் பிரயத்தனத்தால் காப்பாற்றி வைத்திருக்கிறோம். அத்துடன் இதுவரை காலமும் இல்லாதிருந்த மகுடவாசகத்தையும், பாடசாலைச் சின்னத்தையும், பாடசாலை கீதத்தையும், கொடிக் கீதத்தையும் ஆக்கிக் கொடுத்த அரிய வாய்ப்பையும் அன்னைதாஸனுக்குத் தந்து அறிவோடறம் பயில்க என எம்மால் தேர்ந்த மகுடவாசகத்துடன் மிளிர்கிறாள் அங்கே. வருவாள் மிக விரைவில் தன் சொந்த மண்ணிற்கு இங்கே பார்த்திருக்கிறோம். இப் பாடசாலையைத் தப்பிப்பிழைக்க வைத்த பெருந்தகைகளில் அதிபர் திருமதி.பத்மநாதனும் ஒருவர் என்பதும் பதிவுக்குரியது.

வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம் இப்போ வயாவிளான் மத்திய கல்லூரி . இந்நூலின் தாயது காலத்திலேயே இது வயாவிளான் மத்திய கல்லூரிதான். (Vayavilan Central College) எம்மில் எத்தனை பேருக்கு இது தெரியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்போ மத்திய மகா வித்தியாலயமாக மாறிய வேளை பெருங்கட்டிடத்தை ஒதுக்கினார்கள். அவ்வேளை நாம் மாணவர் அப்பாரிய கட்டிடத் தொகுதியை அமைத்த ஒப்பந்தக்காரரும் கல்லடி வேலனின் மகனான கல்லடி மணியம் தான். எத்தனை சிங்களச் சகோதரர்கள் வந்து பணியாற்றினர். பார்த்தேன் பகிர்கிறேன்.

இப்போ ஹலோ என்றால் கிலோவில் காசு பறந்துவரும். பழைய மாணவர்கள் பாடசாலைகளையே பிடுங்கி நடும் வல்லமையில் யாழில் பழைய மாணவர் சங்கங்களின் நிதிபலம். ஆனால் அப்போ எம் தெய்வங்கள் வயவையின் சிற்பிகளான காராளசிங்கம் ஹென்ஸ்மன், சபாரட்ணம், ஆறுமுகம்.... மிக நீண்ட வரிசை அதிபர்கள்.

நாம் மாணவர்கள். அப்போ வட்டார, மாகாண ஒழுங்கு கோப்பாய் வட்டாரத்தில் எங்கள் ஆசான் நவரட்ணராஜாவின் அரிய முயற்சியால் எமது மெய்வல்லுநர் குழுவும், உதைபந்தாட்டக் குழுவும் கோப்பாய் வட்டாரத்தில் 1ம் இடம். கேவலம் இவ் வீரர்களுக்கான சத்துணவாக பயறு, முட்டை என்பவற்றை எம் அக்கால அதிபர்கள் பெற்றுக் கொடுத்து உஷாராக்கப்பட்ட பாட்டை அறிவீர்களா? அனுபவித்த நண்பர்கள் பலர் இருக்கிறார்கள். இந்நிலை தொடர்ந்த வண்ணமே இருந்தது. அந்த நாட்களில் பரீட்சைப் பெறுபேறுகள் கூட யாழ் பிரபல பள்ளிகளுக்கு ஈடாகவே இருந்தது. திருநெல்வேலி, கோண்டாவில், உரும்பிராய் பிள்ளைகள் கூட வயாவிளான் நோக்கியே வந்ததையும் நினைவு கூர்கின்றேன். இப்பொழுதும் என்தாய் மிளிர்ந்து கொண்டே இருக்கிறாள். விஞ்ஞானப்பிரிவு எமது காலத்தில் இருந்திருந்தால் எம்மில் பலர் இன்று வைத்தியர்களாக, பொறியியலாளராக வந்திருப்பர். ஆனால்.... அதனை எமது அமரர்.இராமசாமி, ஆ.சி.நடா என்பவர்கள் தொடர்ந்தார்கள். ஏன் கனகராசவும் கூடத்தான். இப்போ உள்ள அதிபரும் முயற்சிக்கிறார். பிள்ளைகளே உஷாராகுங்கள். உங்கள் ஊக்கமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம் தாயை பழைய உன்னத நிலைக்கு பரீட்சைப் பெறுபேறு மட்டத்திலும் உயர்த்தும் என்பதை மறந்து விடாதீர்கள். வயவையின் கல்விச்சுட்டிகளில் பெரும்பங்கு வகிக்கும் இவைகளுடன் கூட. வயாவிளான் சாதானா பாடசாலை, ஆசிரிய பயிற்சிக் கலாசாலைக்குள் இருந்தது. வயாவிளான் றோ.க.த.க வடமூலையில் இருந்தது. எனது பிள்ளைகள் ஏன் சிவகுமார் கூட அங்கும் படித்தனர். குட்டியப்புலம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை இங்கு அதிபர் வடிவேலுவும் குறிப்பிடத்தக்கவர்.

ஆசான்களைக் குறிப்பிட்டிருந்தேன். அதே போல அறிஞர், ஆன்றோர் வரிசையில் அமரர்கள் பிறக்கிறாசியார் இராசநாயகம், தபாலதிபர்கள் சரவணமுத்து, அவரது மகன் அம்பிகைபாகன், பஸ்கொம்பனி சாமிதம்பையா, பல்துறை நிர்மாணி கல்லடி மணியம், விளையாட்டுப்பிரியன் செந்தி மாமா, ஒப்பற்ற நடிகர் V.மார்க்கண்டு, விதானையார்களான அமரர்கள் ஆ.கணபதிப்பிள்ளை, செ.பத்மநாதன், செ.உலகநாதன், இலங்கைநாயகம், அப்போ இளம் நடிகர்களாக சிவதொண்டன், மயில்வாகனம், அருட்பிரகாசம், தயாரிப்பாளராக திருநாவுக்கரசு ஆகியோர் நிழலாடுகின்றனர்.

முன்பு கொத்தங் காடாக இருந்த இடம் சண்முகம் விளையாட்டரங்காக மாறி இப்பொழுதும் இது வெளியாகப் பார்வையில் உள்ளது போல் தெரிகிறது. இதன் அருகே தான் எமது சட்டத்தரணியின் தனிச் சொத்தான சிவன்கோவில் அமைந்துள்ளது. இதில் அந்த நாட்களில் பித்துக்குளி முருகதாசை அழைத்து பிரசங்கமைத்ததும சிவதொண்டன் எனும் ஒரு நூலையும் சிலகாலம் தொடர்ந்ததையும் பதிவிடலாம்.

எமது இளமைக்காலம் வரையான எம்மூரவரின் உணவுப் பழக்கங்கள் கூடத் தனித்துவமானவை. பட்சணவகைகள் கூட சீனியரியதரம், சிறந்த பாலு றட்டி தேனின் சுவையான பயற்றம் பணியாரத்தோடு முறுக்கு நினைக்கவே நாவில் ஜலம் ஊறுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்மண்ணில் விளைத்த மரவள்ளி, குரக்கன், ஒடியல் கூழ், பிட்டு, இராசவள்ளி என்பன எம்மரபு உணவுகளாக இருந்தன.

அது மட்டுமல்ல அந்த நாட்களில் 500 - 600 கிடாய்கள் எமது மானம் பாராய் கண்ணகியின் வேள்வியில் வெட்டிய வரலாறும் எம் கண்களால் கண்டோம். எமது காலத்திலேயே அதில் பாரிய மாற்றத்தை ஏற்படுத்தி இளைஞர்களாகிய நாம் எம் மூத்த செல்வங்களது எதிர்ப்பையும் சம்பாதித்தது நினைவுக்கு வருகிறது.

இவ் வேள்வியின் பொழுது பரவும் மடையில் நாம் முன்பு குறிப்பிட்ட பலகாரங்கள் மலைபோல் குவித்து வைக்கப் பட்டிருந்தாலும் அவை சங்கமமாவது என்னவோ கிடாய் இறைச்சி போல எமது வயிற்று மாரியினுள் தான். அப்போ எமது ஊர் கலைஞர்களது பறை ஒலி இன்றும் காதில் முழங்குகிறது.

கைத்தொழில்களைப் பொறுத்த வரையிலும் சுருட்டுத் தொழிலாளர் நிறைய இருந்தனர். அவர்கள் அயலூருக்குச் சென்று தான் உழைத்து வாழ்ந்தனர். ஏன் சுருட்டியும் பழகினர் என்று கூடச் சொல்லலாம். இந்த நிலையை மாற்றி எமது ஊரிலேயே ஓர் பெரிய சுருட்டுத் தொழிற்சாலை என்று கூட சொல்லும் வகையில் திரு.நா.கந்தசாமி அவர்கள் ஸ்த்தாபித்து நடாத்தியதையும் இங்கு குறிப்பிடலாம். அதைவிட சிறு சிறு தொழிற்சாலைகள் இல்ல மட்டங்களிலும் இருந்ததையும் பதிவிடலாம்.

வருங்கால ஆசிரியர்களுக்கும் பயிற்றுவிக்கும் பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலை பெயரென்னவோ பலாலி ஆனால் எமது வயவை மண்ணிலேயே இருந்தது. அத்துடன் கொச்சியார் காலத்திலிருந்து எமது விமான நிலையமும், அத்துடன் சேர்ந்த இராணுவக் குடியிருப்புகளும் இருந்தன. சிலர் அந்த இராணுவக் குடியிருப்புகளில் சில மாற்றங்களைச் செய்து லயன் போல வாழ்ந்த வாழ்க்கையும் நேரில் தரிசனம் பெறும் வாய்ப்பும் பெற்றவர்கள் நாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று கேந்திர படைத்தளமாக இருக்கும் இராணுவமுகாம் அன்றிலிருந்தே பெரிய முகாமாகவே இருந்தது. அதற்கயலில் நெற் சந்தைப்படுத்தும் சபையாரது களஞ்சியம். அக்களஞ்சியத்தின் காப்பாளர் கடமையிலிருந்தவர்களில் ஒருவர் அமரர் சின்னம்மாவின் கணவர் ஐயாத்துரை என்பதும் குறிப்பிடத்தக்கது.

எம்மூரின் சிறப்பு கலை கலாசார அம்சங்களில் அன்றிலிருந்து மிளிர்ந்து வந்ததையும் அறிய முடிகிறது. உதாரணம் கூத்து, நாடகம் துறைசார் நடிகர் பலர் எம்முன் சந்ததிகளிலும் இருந்துள்ளனர். எமது இந்து சமய விருத்திச் சங்கத்தினூடாக நண்பர் மயில்வாகனத்தின் நெறியாள்கையில் பக்த மார்கண்டேய குரும்பசிட்டி சன்மார்க்க சபையார் நடத்திய நாடகப் போட்டியில் பரிசில் பெற்றது குறிப்பிடத்தக்கது. இதில் நான் மார்கண்டேயர் பாத்திரம் பாடலுடனான நடிப்பு இந் நாடகத்தில் அப்போ நான் கண்ணெனப் போற்றியிருந்த அரும்பு மீசையை பறித்தெடுத்த தயாரிப்பாளர் என அன்பர் மயில்வாகனத்தை திட்டாத நாளில்லை என்பதையும் பகிர்கின்றேன். இதனை இன்று பக்க வாத்தியத்துடன் இசைச் சொற்பொழிவாக்கி சீடிகளாக்கி சான்றாக்கியுள்ளேன். என்றும் விளையாட்டுத்துறையில் வயாவிளான் மின்மீன் மன்றச் சாதனைகள் பல. அதற்கு ஓர் தனிமலர் தேவை.

அறுபதுகளில் எம்மவர்களுக்கு கொழும்பு நேர்முகப் பரீட்சையானால் கொழும்பு காட்டுபவர்களில் எம்மண்ணின் மைந்தர்கள் அன்று இருந்தனர். குறிப்பாக அண்ணர் V.K.அண்ணன் கதிரவேலு என்போர் என் நினைவில் நிழலாடுகின்றனர். அவர்கள் எனக்கு மட்டுமல்ல எம்போன்ற பல எம்மூத்தவர்களிற்கு ஆற்றிய பணிகள் பல. ஏன் என்னை முதன்முதல் கொழும்புக்கு அழைத்துச் சென்றவர் கூட இம்மலரின் நாயகியின் தமையனாராகிய கிளி அண்ணர் (தமிழரசுத்தூண்) என்பது குறிப்பிடத்தக்கது. இதே போல குறிச்சிகளிற்கொருவராகவும் திகழ்ந்திருந்தனர். அப் பணியில் பெரும்பகுதியை இப்போ இம் மலர் நாயகியின் மகனான சிவகுமார் செய்வதையும் அவதானிக்க முடிகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிஞர்கள் என்ற தலைப்பில் பார்த்தால் எமது ஆசுகவிக்குப் பிற்பாடுள்ளவர்கள் என் அறிவில் எட்டவில்லை. ஆனால் என் குரு இராலிங்க வாத்தியார் கூட அசல் கவிஞர். அவரது முத்தான எழுத்துக்களில் C.R கொப்பியில் எழுதிய கவிதைகளைக் காட்டியிருந்தார். அவற்றை அச்சேற்ற ஆர்வம் கொண்டு டாக்டர் கனகலிங்கத்திடம் அணுகிய பொழுது அவை கால ஓட்டத்தில் கரைந்து விட்டன. பின்னுள்ள சமகாலத்தை நோக்கின் காளிதாசப் புலவர் அவர் சகோதரர் கண்ணதாசன் இம்மலரின் நாயகியின் சோதரர் கிளியரின் புத்திரன் கதிர்காமநாதன் ஸ்ரீதரன் என்போரின் கவி ஆற்றலை ஓரளவுக்கு அறிந்தவன். அண்மையில் 'யாருமற்ற தீவினிலே' என ஓர் கவிதை நூல் வெளியீட்டிற்கு வயவையின் மூத்த கவிஞனாகிய நீங்கள் வந்து ஆசி வழங்க வேண்டும் என்று வயவையூர் கை.சீதாராமன் என்னை அழைத்திருந்தார். ராஜா கிறீம் ஹவுஸ் மண்டபத்தில் வெகு விமரிசையான வெளியீடு கௌரவவிருந்தினர் உரையில் எம் மண்ணின் மாண்பை விளக்கியதுடன் அவரை வாழ்த்தி வழங்கிய வாழ்த்துரையிலும் எம் ஊர் மகத்துவத்தைப் பதிவிட்டுள்ளேன் என்பது குறிப்பிடத்தக்கது. படித்தவர்கள் புரிவர். அதேபோல அண்மையில் Dan T.V நிகழ்வின் கவிதைகள் சொல்லவா பதிவிற்கு சென்றிருந்தவேளை முற்றம் நிறைந்த மல்லிகைகள் கவிதைத் தொகுப்பை ஓர் கவிஞராக அதில் பங்குபற்றிய யாழ் தமிழ்மகள் மணிமேகலை கைலைவாசன் தந்திருந்தார். அவர்களும் எம் மண்ணின் கவிஞர்களே. இப்படியாக இன்னும் பல எம்மூர்க் கவிஞர்கள் பரந்துபட்டிருப்பீர்கள். அவையெல்லாம் எனக்கு எட்டவில்லை. ஆக அவற்றை என் தவறாக ஏற்கிறேன். எம்மூரின் சொத்துக்களே. நீங்கள் கவிபாடியே ஆக வேண்டும். ஏனெனில் ஆசுகவியின் பேசுபுகழ் மண் எம்மண். அது புதுமையல்ல நன்றாகப் பாடுங்கள், பதியுங்கள், வசதியானால் எமக்கும் பார்வைக்கு அனுப்புங்கள். மகிழ்வோம். வாய்ப்புகளின் பொழுது பதிவிடுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்துடன் எனது அம்மா அம்மா என்தாயே என்ற பாடல் துர்க்கையின் அருள் தூண்ட துர்க்கா துரந்தரியூடாக அப் போர்க் காலத்தில் அகில உலகும் தாயை வேண்ட வைத்தது. சமகாலத் திருவருளின் சான்று. இதனை எத்தனை பேர் ஏற்பீர்களோ தெரியாது. ஆனால் நான் நம்பிப் பதிவிடுகின்றேன். கவிமணி எனும் பட்டம் வழங்கி திகழ வைத்த அருட்கவி விநாசித்தம்பி ஐயாவையும் நினைவேந்தி செஞ்சோற்றுக் கடன் தீர்க்க வாய்ப்பான இம் மலரின் தாய்க்கும் இதனூடாக அஞ்சலிக்கின்றேன்.

இவற்றிற்கு மேலாக எமது பார்வையில் எங்கள் வயவையின் சிறப்புகளாக

- அன்று அச்சுவேலி - சங்கானை வீதியை அலங்கரித்த தட்டிவான் சேவையை அலங்கரித்தவர்கள் எம்மவர்கள்.

- அச்சு இயந்திரசாலை ஒன்று எமது இராமலிங்க வாத்தியாரின் வீட்டிற்கருகில் அமைந்து அத்தொழில்நுட்பத்தை வளர்த்தது.

- ரேடியோ மார்க்கோனியை அந்த நாட்களில் அறியாதவர் இலர். இலத்திரனியல் சாதனங்களின் கைவண்ணக் கலையகமாகத் திகழ்ந்தது இது.

- ஆன்மீகக் கலையான உடுக்குவாத்தியத்துடனான காவடிச் சேவையை வழங்கவும் ஒருகூட்டம் எம்மண்ணின் மைந்தர்களில் இருந்தனர்.

- அந்த நாட்களிலேயே மேற்கத்திய பாணியிலான ரேமினல் (TERMINAL BAR) எம் விமான நிலையச் சந்தியில் அமைத்தவர்கள் எம்மவர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- வேம்படியில் சந்தை மரக்கறிக்கு ஒன்று, மச்சத்திற்கு ஒன்று அரிய முத்துப் பேத்தியிட்டை அரை றூவாவிற்கு வாங்கிய மீன் இப்போ ஆயிரம் ரூபா.பலாலிக் கரைக்குச் சென்று பாதி விலைக்கு வாங்குவோரும் உண்டு.

- சோதிடத் துறையில் கூட தமக்கென முத்திரை பதித்தவர் எமது செல்லர் சாத்திரியார். எனது சாதகத்தை ஆண்டு ரீதியாக தமது கைப்பட எழுதிய வண்ணத்தை வேண்டியவர்கள் பார்த்து மகிழும் ஆவணம் என் வசமுண்டு. பலன்கூட இப்படி பிரபலமவார் என உள்ளதையும் சான்றாக்கலாம். துல்லிய கணிப்பு.

- மிகவும் தரமான அழகான களிமண் பொம்மைகளை ஆக்கும் பாவைப்பிள்ளைக் கொம்பனி ஒன்றும் இருந்து பலருக்கு வேலை வாய்ப்பைக் கொடுத்தது.

- நெசவுசாலை அழகுமிக கலை அரங்கு, மேடை நூலகம், எங்கே எங்கே அவை எல்லாம் எமக்கிருந்தனவே.

- இந்நெசவுசாலையில் உரும்பிராய் ஊரெழு யுவதிகள் கூட வந்து உழைத்த வரலாறும் உண்டு.

- உண்மையில் எம்மவர்களே இவை எமது வளங்கள் இவற்றில் ஈடுபட்டவர்கள் கைதேர்ந்த கலைஞர் படைப்பாளிகள். ஆனால் வேதனை என்னவென்றால் அவற்றின் மகத்துவத்தை நாம் போற்றுவதற்குப் பதிலாக கொச்சைப்படுத்தித்தான் பார்த்தார்கள், பார்க்கிறார்கள் எம்மில் சிலர் என்ற வேதனையை உங்களுடன் பகிர்ந்து இவர்களின் சிறப்பைப் போற்றுவோம். இவர்கள் எம்மண்ணின் மைந்தர்கள் போற்றும் வேளை போற்றுவோம்.

இருபதிற்கு மேற்பட்ட நினைவு மலர்கள் எழுதியுள்ள வேளையிலும் இம் மலர் முற்றிலும் மாறுபட்டதை படிப்போர் புரியும் வண்ணம் அமைந்துள்ளதும் சிறப்பாகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆக இதுவரை எமது ஊரைப்பற்றிய வரலாறு கொண்ட ஒரு ஆவணம் எம் பார்வைக்கு கிடைக்காத வகையில் ஏதோ எமக்குத் தெரிந்த வகையில் விரலுக்கு ஏற்ற வீக்கம் என்றளவுக்கு எம்மால் முடிந்தமைக்கு ஒரு மேலெழுந்த புறவரிப்படம் ஒன்றை நாம் இங்கு வைத்ததாக நினைக்கிறோம். ஆழமான ஆராய்ச்சியல்ல. குறைகள் பல உள, எமக்கும் தெரியும். வாசிக்கும் நேயர்கள் பல குறைகளைக் காண்பார்கள். நூற்றாண்டுகள் பல கண்ட என் தாய் மண்ணின் பெருமையை கேவலம் நுனிப்புல்லு மேயும் எம் போன்றவர்களால்... ~~எங்ஙது~~ எம் தாயின் முழு வரலாற்றை 'வயவையின் மாண்பு' என்ற தலைப்பில் எழுத முற்படுங்கள். முற்படுவோம். எம்மால் முடிந்தளவுக்கு எம் பங்களிப்பு அறிவியல் சார்ந்த வகையில் வழங்க என்றும் தயாராகவே உள்ளோம் என்பதையும் வெளிப்படுத்தி இம்மலரை ஒரு மாதிரியாக்கி (Sample) சமர்ப்பித்து எம் அன்புத்தாயின் பாதக் கமலங்களுக்கு காணிக்கையாக்கி எம் வருங்காலச் சந்ததிக்குரிய கருவூலங்களைத் தாங்கிய ஒரு சிறு ஆவண பொக்கிஷமாக்கி அமைகின்றோம்.

எழுத்துருவாக்கம்
கவிமணி க.ஆனந்தராசா
ஓய்வுநிலை அதிபர்

குடும்பத்தினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னதான் செய்யப்போறார் எல்லோரும் பாருங்கோ

## (மீள 06.03.2016ல் பார்த்த பரிதவிப்புப் பாக்கள்)

இரண்டு பத்தாறாண்டு எட்டியும் பார்க்கா எங்கள்
வரந் தரும் மானம் பராயானை கிட்டவே சென்று பார்த்தோம்
கரந்தனைக் கூப்பி கண்ணீர் பெருகிய அந்தவேளை
சுரந்த உணர்வுகளைக் கொட்ட வருந்துகின்றேன் வார்த்தைதேடி

செம்பாட்டு மண்ணில் நாங்கள் எம்பாட்டில் வாழ்ந்தோமையா
கும்பிடக் கோவில் உண்டு பாடம் படித்திட பள்ளிகள் உண்டு
என்னதான் இங்கு இல்லை என்று தற்பெருமை பேசி
நன்றாகத்தான் வாழ்ந்தோம் நாசம் ஏன் வந்ததையோ!

இப்பில் இப்பில் காடாய் எங்குமே பரந்து நிற்க
எங்கே எம் வீடுகள் எல்லைகள் எங்கே எங்கே
தங்கமாய்த் தண்ணீர் தந்த தாழக் கிணறுகள் எங்கே
ஓங்காரமாய் ஒலித்த ஆலய மணிகள் எங்கே

அரிவரிபடித்த ஸ்ரீ வேலுப்பிள்ளை பள்ளி எங்கே
கல்லடியான் குந்திய பெருங் கல்லுதான் எங்கே எங்கே
வன்னியர் கோவிலெங்கே காளி ஆச்சியின் கோவில் எங்கே
என்னரும் உறவுகளோடு தேடியே அலைந்தோமையா

பழைமைக்குச் சான்றாய் நின்ற பருத்த ஆலமரந்தானெங்கே
பாலகர் நாங்கள் ஏறி விளையாடிய சுமைதாங்கி எங்கே
மின் மீன் மன்றத்தாரை வென்றிட முடியாதென்ற
தன் மானந்தந்த மின் மீன் மன்றந்தானெங்கே ஐயோ!

போச்சு போச்சு எல்லாமே அழிஞ்சு போச்சு
ஆச்சியின் அப்பக்கொட்டிலென்ன அழகான வீடுகளும் போச்சு
மூச்சுள்ள வரையும் இந்த மண்ணில்தான் வாழ்வேனென்று
பேச்சுப் பேசி வாழ்ந்தோரெல்லாம் பிற நாட்டில் செத்துப்
- போனார் ஐயோ!

**பட்டு வேட்டி கட்டி பகட்டாய் வாழ்ந்தோமையா**
**கோவணத்திற்கும் வழியற்று கேவலமானோமையா**
**ஆள வழி தெரியாது அலை மோதி நிற்கிறோமையா**
**என்னதான் செய்யப் போறார் எல்லோரும் பாருங்கோ.**

**கவிமணி அன்னைதாஸன், (வயவையூரான்).**
***(தினக்குரல் : 06.04.2016.)***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம்மவர்க்கு

01. எண்ணையும் எழுத்தையும் கண்ணெனப் போற்றி நாம்
கருத்துடன் கற்றிடுவோம்.
மண்ணையும் மதத்தையும் மொழியையும் போற்றியே
மனிதராய் வாழ்ந்திடுவோம்.

02. சந்திரனை அன்று விம்பத்தில் பார்த்தோம்
எந்திரத்தால் இன்று அவனிடம் சென்றோம்
இந்நிலை அவர்க்கு எப்படி வந்தது
சிந்தித்து செயற்பட்டதால் - அன்றோ

03. கை விரலில் எண்ணிக் கணக்கினைப் படித்தோம்
கணணிகளோடு இங்கு கற்கிறோமின்று
செய்மதியால் பல செயல்களைச் செய்வோம்
சிந்தித்ததாலன்றோ - அவர்கள்

04. கனவுகள் பல நாம் கண்டிட வேண்டும்
நனவுகளாக்க நாம் உழைத்திட வேண்டும்
நல்லதையே பார்த்து நல்லதையே செய்தால்
எல்லாமே இன்பமயம் - இங்கே

05: சரிபிழை இங்கே எவரிலும் உண்டு
திறமைகளோ அதற்கு மேலாலே உண்டு
அவரவர் திறமையை அன்னைக் காய்ப் பெற்று
வயவையை உயர்ந்திடுவோம் - நாங்கள்

06. எங்களின் அருமை இளைஞர்களே நீர்
எந்த நாட்டினிலும் உழைக்கின்ற போதும்
சொந்த மண்ணிற்கே வந்து வாழ்வோம் என
சேர்த்து இங்கே கொண்டு வாரீர்-நீங்கள்

07. ஒற்றுமையாய் நாம் உயர்ந்து தான் நின்றோம்
வேற்றுமைப்பட்டோம் வேதனையுற்றோம்
கற்றாங் கொழுகின் கவலை தான் ஏது?
ஒற்றுமையை வளர்ப்போம் - நாங்கள்
ஒற்றுமையை வளர்ப்போம் - நாங்கள்
ஒற்றுமையை வளர்ப்போம் - நாங்கள்

– வயவையூரான் –



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிவரஞ்சனம். 077 3068982

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org